# புதுக்குடியிருப்பு பிரதேச சபை

## முல்லைத்தீவு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 26 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 19 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 மே 14 இல் சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய புதுக்குடியிருப்பு பிரதேச சபையானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் தலைவருக்கு வழங்கப்பட்ட என்னுடைய அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கங்களைத் தவிர, பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பதிலுள்ள குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக் கூற்றுக்களில் பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியானவற்றிற்கும் இடையிலான வித்தியாசத்திற்கான விளக்கங்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானம், செலவினம் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | வருமானம் | | செலவினம் | | சொத்துக்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப் பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப் பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப் பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | - | - | - | - | 02 | 18,624,761 |
| அதிகரித்துக் கூறல்கள் | 04 | 3,780,306 | - | - | 01 | 4,721 |

### 1.3.3. கணககாய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 6,986,786 மொத்தமான கொடுக்கல் வாங்கல்கள் வேண்டப்பட்ட தகவல்களை கணக்காய்விற்கு வேண்டப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், முன்னைய ஆண்டிற்கான ரூபா 3,141,212 தொகையான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானமிகையை ஒப்பிடும் போது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமான மிகை ரூபா 3,028,052 ஆகும்.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் முன்னேற்ற செயற்திட்டத்தால் ஒதுக்கப்பட்ட ரூபா 44,000,000 தொகையான அபிவிருத்தி ஒதுக்கம் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சில்லைக் கடன்கொடுத்தோராக கணக்கிடப்பட்டடிருந்த ரூபா 50,000 தொகையான கடன் மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 ஆம் ஆண்டு தொடர்பில் ரூபா 4,003 தொகையான தொலைபேசியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானம் மீதான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | இறைகளும் வரிகளும் | 90,000 | 67,103 | - |
| (ii) | குத்தகை வாடகைகள் | 10,296,000 | 2,419,580 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 990,000 | 262,883 | - |
| (iv) | வேறு வருமானங்கள் | 16,501,960 | 9,243,173 | 6,304,882 |

### 2.3.2. நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

(அ) மாகாண சபை பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள் ரூபா 1,592,168 ஆகும்.

(ஆ) 2011 ஆம் ஆண்டிற்காக பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்து கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4. போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

(அ) வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் முன்னேற்ற செயற்திட்டத்திற்காக 2011 யூலை 05 இல் ரூபா 10,000 தொகையான பஸ் வாடகை கொடுப்பனவு அனுமதியளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னங்கீகாரம் இல்லாமல் சபை நிதிகளிலிருந்து செயலாளருக்கு ரூபா 84,459 தொகையான பதில் கடமைச் சம்பளம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.5 செயற்பாட்டு/ முகாமைத்துவ தீறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டிற்கான ரூபா 113,598 தொகையான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ஓய்வூதிய பணிப்பாளருக்கு செலுத்தப்பட்டிருக்காததுடன் நானாவித வைப்புக்கள் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 46,832 தொகையான நிகழ்ச்சித்திட்ட உதவியாளருடைய சம்பளம் நானாவித வைப்புக்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்ட ரூபா 164,937 தொகையான சனசமூக நிலையங்களிற்கான மானியம் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் இது நானாவித வைப்புக்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 91,975 தொகையான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் கழிப்பனவுகள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. பதிலாக நானாவித வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(உ) ரூபா 2,787 தொகையான விதவைகள் மற்றும் தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கான கழிப்பனவுகள் விதவைகள் மற்றும் தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்காதுடன் அந்தத் தொகை நானாவித வைப்புக்களிற்கு மாற்றப்பட்டிருந்தது.

## 2.6 செயலாற்றல்

ரூபா 2,300,000 தொகையான பாதீட்டு ஒதுக்கீடுகள் ஆறு செயற்திட்டங்களிற்காக செய்யப்பட்டிருந்த போதிலும் சொல்லப்பட்ட செயற்திட்டங்கள் 2011 ஆண்டில் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான சேகரிப்பு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) கணக்கீடு
(ஈ) மனித வளங்கள்
(உ) வாகனப் பாவணை
(ஊ) நானாவித வைப்புக்கள்
(எ) பாதீட்டுக் கட்டுப்பாடு